# மாதிரித் தேர்வு

001. "*தமிழ்மொழி மீதும் தமிழ் இலக்கியங்கள் மீதும் நான் அதிக மதிப்பு வைத்திருக்கிறேன்*" - சொன்னது யார்?
A) மகாத்மா காந்தி
B) இந்திரா காந்தி
C) சோனியா காந்தி
D) ராஜீவ் காந்தி

002. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:
a) கங்கை கொண்ட சோழபுரம் கோவில் - 1. தஞ்சை
b) ஐராதீஸ்வரர் ஆலயம் - 2. தாராபுரம்
c) கம்பகரேஸ்வரர் ஆலயம் - 3. திருபுவனம்
d) மூவர் கோவில் - 4. கொடும்பலூர்

*குறியீடுகள்:*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 4 | 2 | 3 |
| B) | 1 | 3 | 4 | 2 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 1 | 2 | 3 | 4 |

003. பின்வரும் வாக்கியங்களைக் கவனி
i. '*உத்தம சோழன்*' என்ற பெயரில் அறியப்படுபவர் முதலாம் இராஜேந்திரன்
ii. பிற்காலச் சோழப் பேரரசு 9 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது
iii. பிராமணர்கள் குடியிருந்த பகுதி '*சதுர்வேதி மங்கலம்*' என்றழைக்கப்பட்டது
iv. சோழ இராணுவம் 70 படைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது
*இவற்றுள்:*
A) i, ii மற்றும் iii சரி
B) i, iii மற்றும் iv சரி
C) i மற்றும் iii சரி
D) அனைத்தும் சரி

004. தொல்காப்பியத்திற்கு விளக்க உரை எழுதியவர்
A) சேனவரையர்
B) அடியார்க்கு நல்லார்
C) பரிமேலழகர்
D) மயிலைநாதர்

005. '*மூக்கறுப்பு போர்*' நடைபெற்ற இடம்
A) சென்னை
B) திண்டுக்கல்
C) மைசூர்
D) ஸ்ரீரங்கம்

006. கூத்து என்பது ஒரு வகை
A) இசை
B) நாடகம்
C) நாட்டியம்
D) விளையாட்டு

007. கீழ்காண்பவற்றுள் நமது தேசிய சின்னத்தில் இல்லாத விலங்கு எது?
A) புலி B) சிங்கம் C) குதிரை D) காளை

008. 5, 2 ஆகியவற்றை மூலங்களாகக் கொண்ட சமண்பாடு எது?
A) $x^2-7x+10=0$
B) $7x^2-10x+10=0$
C) $10x^2-7x+10=0$
D) $x^2-10x+7=0$

009. வியட்நாமில் நடைபெற்ற '*மிஸ் எர்த் டேலண்ட் - 2010*' போட்டியில் பட்டம் வென்ற இந்திய அழகி (பெங்களுரைச் சேர்ந்தவர்)
A) ரீட்டா பிரியா
B) நிகோலே பாரியா
C) அலெக்சாண்டிரியா மில்ஸ்
D) ஐஸ்வர்யா ராய்

We Shine Academy™

010. ஒரு பொருளின் வெப்பம் மற்றொரு பொருளுக்கு ஊடகமின்றி கடத்தப்படும் முறையானது இவ்வாறு அழைக்கப்படுகிறது
A) வெப்பக் கடத்தல்
B) வெப்பச் சலனம்
C) வெப்பக் கதிர்வீசல்
D) இவற்றுள் ஏதுமில்லை

011. தனித்துக் காணப்படும் பவள உயிரினங்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன
A) பாலிப்புகள்
B) பவளம்
C) பாசிகள்
D) பவளத் தொடர்

012. கார்பன்-டை-ஆக்ஸைடு ($CO_2$) வாயுவை ஒளிச்சேர்க்கையின் மூலமாக அகற்றிவிடும் கடற்பாசி
A) சூசான்தேல்
B) கொரியோலிஸ்
C) பாலிப்புகள்
D) கிளாமிடோமோனஸ்

013. நீர் உயிரிகளை (உதாரணம்: மீன்) வளர்க்கும் வழக்கம் தோன்றிய நாடு
A) சீனா
B) இந்தியா
C) ஜப்பான்
D) கனடா

014. சிலப்பதிகாரத்துள் சேர நாட்டின் பெருமையை கூறுவது
A) புகார் காண்டம்
B) மதுரைக் காண்டம்
C) வஞ்சிக் காண்டம்
D) இவற்றுள் ஏதுமில்லை

015. '*பஞ்சாப் படுகொலை பாரில் கொடியது*' என்ற நாடகப் பாடலைப் பாடியவர்
A) விசுவநாததாஸ்
B) சுப்பிரமணிய சிவா
C) இராமலிங்கம் பிள்ளை
D) வாஞ்சிநாதன்

016. '*சுபாஷாபிமானம்*' எனபதன் பொருள்
A) தனிமனிதப் பற்று
B) தாய்நாட்டுப் பற்று
C) தாய்மொழிப் பற்று
D) தெய்வப் பற்று

017. உலக வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
A) 1944
B) 1945
C) 1947
D) 1948

018. முகடு கணக்கிடுக: 450, 300, 380, 400, 450, 390, 500
A) 400
B) 424
C) 450
D) 500

019. கி.பி. 1157-ல் தோற்றுவிக்கப்பட்ட முதல் பொது வங்கி நிறுவனம்
A) வெனிஸ் வங்கி
B) பார்சிலோனா வங்கி
C) ஜெனோவா வங்கி
D) ஆம்ஸ்டர்டாம் வங்கி

020. நிறக்குருடை கண்டறிந்தவர்
A) மாரிசன்
B) வில்சன்
C) இராபர்ட்சன்
D) ஜேகப்

021. 'O' வகை இரத்த மனிதர்கள் எந்த இரத்த வகையினரிடமிருந்து இரத்தம் பெற முடியும்?
A) B இரத்த வகை
B) A இரத்த வகை
C) அனைத்து வகை இரத்தமுடையவரிடம் இருந்தும்
D) O இரத்த வகை

022. இந்தியாவின் தேசிய ஹெர்பாரியம் அமைந்துள்ள இடம்
A) மும்பை
B) கொல்கத்தா
C) சென்னை
D) டெல்லி

023. உயர் தாவரங்களில் காணப்படும் இயற்கையான ஆக்ஸின் எது?
A) I.A.A
B) 2, 4 - D
C) ஸியோட்டின்
D) $GA_2$

We Shine Academy™

024. டவுன் சிண்ட்ரோம் இதனால் உருவாகிறது
A) 18 - டிரைசோமி
B) 21 - டிரைசோமி
C) 21 - மானோசோமி
D) 18 - மானோசோமி

025. இருசொல் பெயரிடு முறையினை முதன் முதலில் பயன்படுத்திய தாவரவியல் அறிஞர்
A) பாஹின்
B) லின்னேயஸ்
C) ஹுக்கர்
D) டார்வின்

026. '*மருத்துவத் துறையின் தந்தை*' என மருத்துவ மேதை குருசாமி பாராட்டப்படக் காரணம்
A) கதிரியக்கத்துறையில் சிறப்புப் பயிற்சி பெற்றமை
B) ஆங்கில மற்றும் இந்திய மருந்துவங்களை ஒப்பாய்வு செய்தமை
C) மெட்டீரியா மெடிக்காவிற்கு சேவை ஆற்றியமை
D) 1920-ம் ஆண்டு தமிழகத்தில் முதன் முதலில் எம்.டி. பட்டம் பெற்றமை

027. தமிழகத்தில் பள்ளி மாணவர் நலத்திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு
A) 1961
B) 1964
C) 1987
D) 1991

028. இந்திய அரசு 2002-ம் ஆண்டு விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்காக துவங்கிய திட்டம்
A) மகிள மண்டல் திட்டம்
B) சமூக நலத்திட்டம்
C) ஆனந்தம் திட்டம்
D) சுவாதர் திட்டம்

029. பெருங்கடல் ஓட்டில் அதிக அளவு காணப்படுவது
A) சிலிகா, மாக்னிசியம்
B) சிலிகா, அலுமினியம்
C) இரும்பு, மாக்னிசியம்
D) சிலிகா, இரும்பு

030. ஒரு மலைத்தொகுதியை தோற்றுவிக்கிற செயல்முறைகள் அனைத்தும் இவ்வாறு அழைக்கப்படுகிறது
A) ஓரோஜெனிஸிஸ்
B) மவுன்ட்பேசின்
C) கிராப்டோஜெனிஸிஸ்
D) லித்தோபேசின்

031. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:
a) கீழ்நோக்கி சரியும் பாறைகள் - 1. கிராபன்
b) மேலெழுகிற பாறைத் துண்டுகள் - 2. ஹார்ஸ்டு
c) சிமா (SIMA) பாறைகள் - 3. கிரானைட் வகை
d) சியால் (SIAL) பாறைகள் - 4. பசால்ட் வகை

*குறியீடுகள்:*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 1 | 2 | 4 | 3 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 1 | 2 | 3 | 4 |

032. அமெரிக்க ஐக்கிய நாட்டிலேயே மிகவும் தாழ்வான பகுதியாகக் கருதப்படுவது
A) மரண பள்ளத்தாக்கு
B) கீழ்முக பள்ளத்தாக்கு
C) தாமோதர் பள்ளத்தாக்கு
D) டெதிஸ் பள்ளத்தாக்கு

033. '*புனித பூமி*' எனும் அடைமொழியிட்டு வழங்கப்படும் தமிழக மாவட்டம்
A) சிவகங்கை
B) மதுரை
C) காஞ்சிபுரம்
D) இராமநாதபுரம்

We Shine Academy ™

034. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் 2001-ம் ஆண்டு பிப்ரவரி 17 ஆம் நாள் தொடங்கப்பட்டது. இது தொடங்குவதற்கான முடிவு எடுக்கப்பட்ட தமிழ் இணைய மாநாடு நடைபெற்ற ஆண்டு?
A) 1998 B) 1999 C) 2000 D) 2001

035. மாவீரர் செண்பகராமன் இந்திய சர்வதேசக் குழுவை நிறுவிய இடம்
A) பெர்லின் B) மாஸ்கோ C) டோக்கியோ D) மும்பை

036. தேர்தல்கள் பற்றி கூறும் இந்திய அரசியலமைப்புப் பகுதி
A) XIV B) XIVA C) XV D) XX

037. கிரேக்கர்களின் பழங்காப்பியம் எனப் பாராட்டப்படும் இலியட்டை பாடியவர்
A) ஹோமர் B) மெனலஸ் C) ஹெலன் D) பாரிஸ்

038. '*சிரிக்கத் தெரியாதவர்களுக்கு பகல் பொழுதும் இருட்டே ஆகும்*' எனக் கூறியவர்
A) பண்டிதமணி
B) திருவள்ளுவர்
C) ஆன்மிகச் செல்வர்
D) கண்ணதாசன்

039. செல்களில் நீரின் உள்ளார்ந்த ஆற்றல் பின்வரும் எந்த கிரேக்க எழுத்தால் குறிக்கப்படுகிறது?
A) $\Psi$ B) $\Omega$ C) $\prod$ D) $\sum$

040. ஒளி மற்றும் இருட்காலங்களின் கால அளவிற்கு ஏற்ப தாவரத்தில் ஏற்படும் விளைவை கண்டுபிடித்தவர்கள்
A) கார்னர் மற்றும் அல்லார்ட்
B) கால்வின் மற்றும் பிரௌன்
C) கால்வின் மற்றும் எட்வர்டு
D) ஸ்லைடன் மற்றும் ஸ்வான்

041. பின்வரும் வாக்கியங்களைக் கவனி
i. காற்று சுவாசத்தின் போது 36 ஏடிபி மூலக்கூறுகள் உண்டாகின்றன.
ii. காற்றில்லா சுவாசத்தில் 2 ஏடிபி மூலக்கூறுகள் மட்டுமே உண்டாகின்றன.
*இவற்றுள்:*
A) i மட்டும் சரி
B) ii மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு

042. நவாஷின் என்பவர் இரட்டைக் கருவுறுதலை முதன் முதலில் எந்தத் தாவரத்தில் கண்டறிந்தார்
A) லிலியம்
B) அபுடிலான்
C) ருயல்லியா
D) ஸாந்தியம்

043. முதன் முதலில் சிமெண்டைக் கண்டுபிடித்தவர்
A) ஜோசப் அஸ்பிடின்
B) ஜேம்ஸ் பிரிஸ்ட்லி
C) போர்ட்லேண்ட்
D) பெக்மென்

044. மீனாவின் மாத வருமானம் ₹ 4000. மாத வருமானத்தில் 80% செலவு செய்தால் மீனாவின் சேமிப்பு எவ்வளவு?
A) 200 B) 400 C) 600 D) 800

045. i) 1950 ii) 1960 iii) 1600 iv) 1900
இவற்றுள் லீப் ஆண்டு(கள்) எவை?
A) i மட்டும்
B) ii மற்றும் iii
C) ii, iii மற்றும் iv
D) இவையனைத்தும்

046. 2000-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் தேதி வியாழக்கிழமை எனில் அதே ஆண்டு ஜுன் மாதம் 9ஆம் தேதி என்ன கிழமை?

A) புதன் B) வியாழன்

C) வெள்ளி D) சனி

047. ஒரு சதுரத்தின் பக்க அளவு 12 செ.மீ எனில் அதன் சுற்றளவு?

A) 144 ச.செ.மீ B) 48 செ.மீ

C) 72 செ.மீ D) 112 ச.செ.மீ

048. கீழ்கண்டவற்றில் ஒளிவிலகல் எண் அதிகம் கொண்டது

A) காற்று B) நீர் C) கிளிசரின் D) வைரம்

049. லென்ஸ் சமன்பாடு எது?

A) 1/f = 1/v + 1/u B) 1/f = 1/v - 1/u

C) 1/2f = 1/v - 1/u D) 1/2f = 1/v + 1/u

050. நீலம் மற்றும் பச்சை நிறங்கள் இணைந்து கிடைக்கும் நிறம்

A) மஞ்சள் B) வெள்ளை C) மெஜன்டா D) சியான்

051. சூரியனின் ஏற்றக் கோணம் .............. க்கு மேல் அதிகமானால் தரையில் உள்ள ஒருவர் முதன்மை வானவில்லைக் காண முடியாது

A) $55^0$ B) $52^0$ C) $42^0$ D) $44^0$

052. இம்முறையில் நோயாளியின் வயிற்க் குழியில் உள்ள திசுக்களே சல்லடை போன்று பயன்படுத்தப்படுகின்றது

A) பெரிடோனியல் டையாலிசிஸ் B) ஹுமோடையாலிசிஸ்

C) லாப்ராஸ்கோப்பி D) ஆன்ஜியோகிராம்

053. பின்வருவனவற்றில் எது குரோமோசோமில் காணப்படுவதில்லை

A) நியூக்ளிக் அமிலம் B) சிஸ்டோன் புரதம்

C) சிஸ்டோன் அற்ற புரதம் D) நிறமிகள்

054. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:

a) ஹுயூகோட்வரிஸ் - 1. ஈனோத்தீரா லெமாரிக்கியானா

b) டி.எச். மார்கன் - 2. டிரோசோபைலா மிலானோகேஸ்ட்டர்

c) பாலிடீன் குரோமோசோம் - 3. பால்பியானி

d) தூரிகை குரோமோசோம் - 4. ராக்கொர்ட்

*குறியீடுகள்:*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 1 | 2 | 4 | 3 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 1 | 2 | 3 | 4 |

055. வேதிப் பொருட்களை கொண்டு திடீர் மாற்றங்களை தூண்டலாம் என்பதை முதல் முதலாக கண்டறிந்தவர்

A) ஹுயூகோட்வரிஸ் B) டி.எச். மார்கன்

C) சார்க்.ஃ.ஆப் D) ஆயர்பாக்

056. மாமல்லபுரத்தை நிர்மாணித்தவர்

A) நரசிம்மவர்மன் B) நந்திவர்மன்

C) மகேந்திரவர்மன் D) சந்திரகுப்தர்

We Shine Academy™

057. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:

| *பத்திரிக்கை* | | *தொடங்கியவர்* |
|---|---|---|
| a) இண்டிபெண்டன்ட் | - | 1. மோதிலால் நேரு |
| b) பெங்காலி | - | 2. சுரேந்திரநாத் பானர்ஜி |
| c) அல்ஹிலால் | - | 3. அபுல்கலாம் ஆசாத் |
| d) நேஷனல் ஹெரால்ட் | - | 4. ஜவஹர்லால் நேரு |

*குறியீடுகள்:*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 1 | 2 | 4 | 3 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 1 | 2 | 3 | 4 |

058. ராஷ்டிரிய சுயம் சேவக் (RSS) அமைப்பை 1925-ல் தொடங்கியவர்
A) ஹெட்கேவார்
B) வில்லியம் ஜோன்ஸ்
C) ஹக்கீம் அஜ்மல்கான்
D) அருண்டேல்

059. ஹாக்கி விளையாட்டில் அணிக்கு எத்தனை பேர்?
A) 9
B) 10
C) 11
D) 12

060. '*மணலாறு*' என்றழைகப்படுவது
A) கங்கை
B) காவிரி
C) பாலாறு
D) வைகை

061. இந்திய அரசு தேசீய உயிர்தொழிற் நுட்பவியல் குழுமம் (NBTB) என்ற அமைப்பை ஏற்படுத்திய ஆண்டு
A) 1962
B) 1979
C) 1982
D) 1986

062. உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட விஷ வாயு
A) சரீன் வாயு
B) ஐஸோபியூட்டிலீன்
C) மீதைல் ஐஸோசயனைடு
D) மஸ்டர்ட் வாயு

063. வெள்ளை துத்தம் என்று அழைக்கப்படுவது
A) ஜிங்க் சல்பேட்
B) காப்பர் சல்பேட்
C) பாஸ்போரைட்
D) தாமிர பைரைட்

064. தளநிரப்பியாக பயன்படும் அறுகோணத்தின் உட்கோண அளவானது
A) 60 பாகை
B) 90 பாகை
C) 120 பாகை
D) 180 பாகை

065. புதுமுக இயக்குநரின் முதல் சிறந்த படத்திற்காக வழங்கப்படும் தேசிய விருது
A) இந்திரா காந்தி விருது
B) நர்கீஸ் தத் விருது
C) தாதா சாஹிப் பால்கே விருது
D) தங்கத் தாமரை விருது

066. சிறந்த இலக்கியத்திற்காக பிர்லா ஃபவுண்டேஷன் வழங்கும் '*சரஸ்வதி சம்மான்*' விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்
A) இந்திரா பார்த்தசாரதி
B) வைரமுத்து
C) ஜெயகாந்தன்
D) புதுமைப்பித்தன்

067. சட்டத்துறையின் தந்தை எனப் போற்றப்படுபவர்
A) ஏராஸ்டோதீனஸ்
B) ஜெராமி பெந்தம்
C) ஜியாஃப்ரி சாஸர்
D) மார்ட்டின் கூப்பர்

We Shine Academy™

068. அமெரிக்காவின் தற்போதைய துணை அதிபர்

A) ஜோ பைடன் B) ஹிலாரி கிளிங்டன்

C) ஜான் ஆடம்ஸ் D) ரிச்சர்டு நிக்ஸன்

069. புதிய பொருளாதாரத்தின் தந்தை என்றழைக்கப்படுபவர்

A) ஆதம் ஸ்மித் B) மார்சல்

C) காரல் மார்க்ஸ் D) J.M. கீன்சு

070. மக்கள் தொகை வெடிப்பிற்கு எது ஒரு முக்கிய காரணமல்ல?

A) அதிக பிறப்பு வீதம் B) அதிக இறப்பு வீதம்

C) சமூக பழக்கவழக்கங்கள் D) ஏழ்மை

071. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:

a) ஜவகர் கிராம வேலை வாய்ப்பு திட்டம் (JGSY) - 1. 1999

b) நாட்டு சமூக உதவித் திட்டம் (NSAP) - 2. 1995

c) வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் (EAS) - 3. 1993

d) புதிய தொழில் கொள்கை - 4. 1991

*குறியீடுகள்:*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 1 | 2 | 3 | 4 |

072. "*ஓர் இருட்டறையில் மெழுகுவர்த்தியின் ஒளி பரவுவது போல போக்குவரத்து அந்தந்த பகுதிகளில் தனது சேவையை ஆற்றுகிறது*" இதனை கூறியவர்

A) ஜேம்ஸ் வாட் B) மோகினி சேதை

C) கே.கே. செக்சேனா D) பி.கே. கோஸ்

073. மின்விளக்கு விளம்பரம் என்பது

A) புறமனை விளம்பரம் B) அரசு விளம்பரம்

C) இணையதள விளம்பரம் D) நேரடி விளம்பரம்

074. கொலைக் குற்றம் செய்தவர்களுக்கு மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ வழங்கும் இந்திய தண்டனை சட்ட விதியானது?

A) விதி 144 B) விதி 217

C) விதி 302 D) விதி 326

075. போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே இந்தியக் குடியரசுத் தலைவர்

A) ராஜேந்திர பிரசாத் B) நீலம் சஞ்சீவரெட்டி

C) பக்ருதீன் தயாப்ஜி D) அப்துல் கலாம்

076. இரான் நாட்டின் பழைய பெயர்

A) பெர்சியா B) மெசபடோமியா

C) சயாம் D) ரொடீசியா

077. கொடியில் தேச வரைபடத்தைக் கொண்ட நாடு

A) ஸ்விட்சர்லாந்து B) சைப்ரஸ்

C) ஜாம்பியா D) ஸ்வீடன்

078. கீழ்கண்டவற்றில் பாக்டீரிய பூச்சிக் கொல்லி எது?

A) என்டிரோபாக்டர் B) பாஸில்லஸ்

C) புரோட்டியஸ் D) இவை அனைத்தும்

We Shine Academy™

079. ஆசியாவிலேயே முதல் முதலாக விற்பனை வரியை அறிமுகப்படுத்திய மாநிலம்
A) தமிழ்நாடு B) ஆந்திர பிரதேசம்
C) ஹரியானா D) மேற்கு வங்காளம்

080. பரத்பூர் பறவை சரணாலயம் அமைந்துள்ள மாநிலம்
A) இராஜஸ்தான் B) மத்திய பிரதேசம்
C) உத்திர பிரதேசம் D) கர்நாடகம்

081. பழைய கற்கால கருவிகளை சென்னைக்கு அருகிலுள்ள பல்லாவரத்தில் கண்டறிந்தவர்
A) ராபர்ட் புருஸ் பூட் B) யுவான் சுவாங்
C) மார்ட்டிமம் வீலர் D) துப்ரேல்

082. கீழ்கண்டவற்றில் தவறான ஒன்று எது?
A) உலோக காலத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டது
B) புதிய கற்காலத்தில் பிராணிகளை வளர்க்கத் தொடங்கினர்
C) பழைய கற்கால மனிதர்கள் இறை நம்பிக்கை கொண்டிருந்தனர்
D) களப்பிரர் காலத்தில் நிகண்டுகள் இயற்றப்பட்டன

083. சேக்கிழாரின் பெரியபுராணம் யாருடைய ஆட்சியை பற்றி கூறுகிறது?
A) சேரர் B) சோழர்
C) பாண்டியர் D) பல்லவர்

084. மருத நில மக்களின் கடவுள்
A) இந்திரன் B) வருணன்
C) முருகன் D) திருமால்

085. தமிழ்நாட்டில் கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் உள்ள இடம்
A) கோயமுத்தூர் B) சின்னமனூர்
C) ராணிப்பேட்டை D) திருவானைக்காவல்

086. திருக்குரானில் உள்ள அதிகாரங்கள் மற்றும் வசனங்களின் எண்ணிக்கை முறையே
A) 113 மற்றும் 7867 B) 114 மற்றும் 6666
C) 133 மற்றும் 1330 D) 123 மற்றும் 7777

087. மண்புழுக்கள் உற்பத்தி செய்த உரம் இவ்வாறு அழைக்கப்படுகிறது
A) வெர்மிகல்சர் B) வெர்மிகம்போஸ்டிங்
C) வெர்மிகம்போஸ்ட் D) இவை அனைத்தும்

088. கௌரவர்களின் ஒரே சகோதரி
A) மாண்டவி B) துஷாலா
C) ஸ்ருதகீர்த்தி D) குந்திதேவி

089. தஞ்சையில் 1805-ம் ஆண்டு அச்சுக் கூடத்தை நிறுவியவர்
A) சீகன் பால்கு B) முதலாம் ஷாஜி
C) முதலாம் சரபோஜி D) இரண்டாம் சரபோஜி

090. 11-வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (2010) நடைபெற்ற இடம்
A) டெல்லி B) டாக்கா
C) கோவா D) காட்மண்டு

We Shine Academy ™

091. கால்சியத்தின் சல்பேட் தாது

A) ஜிப்சம் B) எப்சம்

C) காலமைன் D) டோலமைட்

092. ஸ்டார்ச்சுடன் நீல நிறத்தைக் கொடுப்பது

A) கால்சியம் B) குளோரின்

C) அயோடின் D) மெக்னீசியம்

093. ஜனநாயகத்துக்காக போராடி வரும் *ஆங் சான் சூகீ* சுமார் 19 ஆண்டுகள் வீட்டுக்காவலுக்கு பிறகு, அன்மையில் (நவம்பர் 13, 2010) விடுதலை செய்யப்பட்டார். இவர் எந்நாட்டைச் சார்ந்தவர்?

A) மலேசியா B) மியான்மர்

C) கம்போடியா D) பாகிஸ்தான்

094. இங்கிலாந்து பிரதமர் டேவிட் ஹேமரூன் எக்கட்சியை சார்ந்தவர்?

A) தொழிலாளர் கட்சி B) கன்சர்வேடிவ் கட்சி

C) லிபரல் ஜனநாயக கட்சி D) குடியரசு கட்சி

095. தமிழக அரசு தமிழில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிப்பதற்கான அறிவிப்பு வெளியிட்ட மாநாடு

A) கோவை உலகத் தமிழ் செம்மொழி மாநாடு

B) தஞ்சை உலகத் தமிழ் மாநாடு

C) மதுரை உலகத் தமிழ் மாநாடு

D) சென்னை உலகத் தமிழ் மாநாடு

096. மத்திய சட்டமன்றத்தில் ஈரடுக்கு அவை ஏற்படுத்த வழிவகை செய்தது

A) மிண்டோ மார்லி சீர்திருத்தம் (1909)

B) விக்டோரியாப் பேரறிக்கை (1858)

C) மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் (1919)

D) இந்திய அரசுச் சட்டம் (1935)

097. '*ஹேபபிஸ்கார்பஸ்*' என்பது

A) ஆட்கொணர் நீதிப்பேராணை B) செயலுறுத்தும் நீதிப்பேராணை

C) நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை D) தடையுறுத்தும் நீதிப்பேராணை

098. இதனை '*ஷயாத்ரி மலைத்தொடர்*' என்றும் அழைப்பர்

A) மேற்குதொடர்ச்சி மலை B) கிழக்குதொடர்ச்சி மலை

C) ஆரவல்லி மலை D) இமயமலையின் தென் பகுதி

099. நாகலாந்து மாநிலத்தின் தலைநகரம்

A) அய்ஜ்வால் B) கேங்டாக்

C) அகர்த்தலா D) கோஹிமா

100. இரத்த அழுத்தமானியை முதன் முதலில் கண்டறிந்தவர்

A) வில்லியம் ஹார்வி B) மைக்கேல் ஃபங்க்

C) கோரேட்காஃப் D) லூகோ பேசியாலா

# மாதிரித் தேர்வு (பொதுத் தமிழ்)

101. பிரித்து எழுதுக: *சென்னீர்*
A) செல் + நீர்
B) செம்மை + நீர்
C) செழுமை + நீர்
D) செ + நீர்

102. பிரித்து எழுதுக: *ஆண்டகை*
A) ஆண்ட + கை
B) ஆண்டு + தகை
C) ஆ + தகை
D) ஆண் + தகை

103. பிரித்து எழுதுக: *கழற்கால்*
A) கழள் + கால்
B) கழழ் + கால்
C) க + கால்
D) கழல் + கால்

104. பிரித்து எழுதுக: *அறத்துக்கு*
A) அறத்து + கு
B) அறம் + அதுக்கு
C) அறம் + அத்து + கு
D) அ + அத்து + கு

105. பிரித்து எழுதுக: *தீங்கனி*
A) தீம் + கனி
B) தீமை + கனி
C) தீ + கனி
D) தீங் + கனி

106. இலக்கணக் குறிப்பறிக – *தெறுபடை*
A) வினைத்தொகை
B) உம்மைத்தொகை
C) வேற்றுமைத்தொகை
D) பண்புத்தொகை

107. இலக்கணக் குறிப்பறிக – *திறன்*
A) வினைத்தொகை
B) மரூஉ
C) மரூஉ
D) ஈற்றுப்போலி

108. இலக்கணக் குறிப்பறிக – *எந்தை*
A) விரிஉவமை
B) உம்மைத்தொகை
C) மரூஉ
D) பண்புத்தொகை

109. இலக்கணக் குறிப்பறிக – *ஆண்மை*
A) தொழிற்பெயர்
B) பண்பாகுபெயர்
C) வேற்றுமைத்தொகை
D) முற்றெச்சம்

110. இலக்கணக் குறிப்பறிக – *கழிமகிழ்*
A) உரிச்சொல் தொடர்
B) உம்மைத்தொகை
C) வினைத்தொகை
D) பண்புத்தொகை

111. ‘*திருநாளைப் போவார்*’ என்று அழைக்கப்படுபவர்
A) நம்மாழ்வார்
B) நந்தனார்
C) முடத்தாமக் கண்ணியார்
D) ஆண்டாள்

112. ‘*கற்பனைக் களஞ்சியம்*’ எனப் போற்றப்படுபவர்
A) சிவப்பிரகாசர்
B) கண்ணதாசன்
C) சத்திமுத்தப்புலவர்
D) குமரகுருபரர்

We Shine Academy™

113. ‘*மே தினம் கண்டவர்*’ – அடைமொழியால் குறிக்கப்பெறும் சான்றோர்

A) அண்ணாமலை செட்டியார்
B) ஈ.வே. ராமசாமி
C) சிங்கார வேலனார்
D) சங்கரதாஸ் சுவாமிகள்

114. கவியோகி என்ற சொல் யாரைக் குறிக்கும்

A) சுப்பிரமணிய பாரதியார்
B) பாரதிதாசன்
C) சுத்தானந்த பாரதியார்
D) தேசிய விநாயகம் பிள்ளை

115. ‘*பாவலர் ஏறு*’ எனப்படுபவர்

A) பெருந்தலைச் சாத்தனார்
B) தேவநேயப் பாவணர்
C) சோமசுந்தர பாரதியார்
D) பெருஞ்சித்திரனார்

116. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிக

| | *பொலி* | *பொளி* | *பொழி* |
|---|---|---|---|
| A) | அழகு | கொத்து | ஊற்று |
| B) | அழகு | தோண்டு | பாய்ச்சு |
| C) | ஊற்று | அழகு | தோண்டு |
| D) | வளமை | வெட்டு | தேக்கு |

117. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிக

| | *வாலை* | *வாழை* | *வாளை* |
|---|---|---|---|
| A) | மீன்வகை | மரவகை | கம்பு |
| B) | இளம்பெண் | மரவகை | மீன்வகை |
| C) | மரவகை | மீன்வகை | இளம்பெண் |
| D) | மரவகை | இளம்பெண் | மீன்வகை |

118. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிக

| | *அலை* | *அழை* | *அளை* |
|---|---|---|---|
| A) | கடலலை | தயிர் | கூப்பிடு |
| B) | கூப்பிடு | அழைத்தல் | புற்று |
| C) | புற்று | அழகு | கடலலை |
| D) | கடலலை | கூப்பிடு | தயிர் |

119. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிக

| | *திண்மை* | *தின்மை* |
|---|---|---|
| A) | வலிமை | தீமை |
| B) | தீமை | வலிமை |
| C) | எதிர்பார்ப்பு | வலிமை |
| D) | வலிமை | எதிர்பார்ப்பு |

120. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிக

| | *மூலை* | *மூளை* | *மூழை* |
|---|---|---|---|
| A) | உடலுருப்பு | முடுக்கு | அறிவு |
| B) | முடுக்கு | உடலுருப்பு | அகப்பை |
| C) | அறிவு | முடுக்கு | உடலுருப்பு |
| D) | அகப்பை | உடலுருப்பு | முடுக்கு |

121. ‘*திருச்சிற்றம்பலக் கோவை*’ என்ற அடைமொழிபெற்ற நூலை இயற்றியவர்

A) ஆண்டாள்
B) திருநாவுக்கரசர்
C) மாணிக்கவாசகர்
D) சுந்தரர்

We Shine Academy™

122. அரிசில்கிழாருக்கு இரும்பொறை அளித்த பரிசு

A) கண்ணுக்கு எட்டிய நாடெல்லாம்
B) நூறாயிரம் காணம்
C) அரச செல்வம் அனைத்தும்
D) இவற்றுள் ஏதுமில்லை

123. '*சுவரும் சுண்ணாம்பும்*' எனும் கவிதை நூலின் ஆசிரியர்

A) அசோகன்
B) வாணிதாசன்
C) சுரதா
D) பாரதிதாசன்

124. மணிமேகலையில் உள்ள காதைகளின் எண்ணிக்கை

A) 18
B) 22
C) 30
D) 33

125. '*தம்பிரான் தோழர்*' என்று அழைக்கப்படுபவர்

A) சேக்கிழார்
B) திருநாவுக்கரசர்
C) திருஞானசம்பந்தர்
D) சுந்தரர்

126. பொருத்துக:

| *திணை* | *சிறுபொழுது* |
|---|---|
| 1. குறிஞ்சி | அ. வைகறை |
| 2. பாலை | ஆ. நண்பகல் |
| 3. முல்லை | இ. மாலை |
| 4. மருதம் | ஈ. யாமம் |

*குறியீடுகள்:*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | ஆ | இ | அ |
| B) | ஆ | அ | ஈ | இ |
| C) | இ | ஈ | ஆ | அ |
| D) | ஈ | அ | ஆ | இ |

127. பொருத்துக:

| | |
|---|---|
| 1. திருத்தொண்டத் தொகை | அ. சுந்தரர் |
| 2. திருத்தொண்டர் புராணம் | ஆ. சேக்கிழார் |
| 3. சின்னச் சீறா | இ. பாரதிதாசனார் |
| 4. இசையமுது | ஈ. பனு அகுமது மரைக்காயர் |

*குறியீடுகள்:*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | இ | அ | ஆ |
| B) | ஆ | அ | ஈ | இ |
| C) | அ | ஆ | ஈ | இ |
| D) | ஈ | அ | ஆ | இ |

128. பொருத்துக:

| | |
|---|---|
| 1. பாவலர் மணி | அ. வாணிதாசன் |
| 2. கவிராட்சசன் | ஆ. ஒட்டக்கூத்தர் |
| 3. மாதானுபங்கி | இ. பாரதியார் |
| 4. கற்பூரச் சொற்கோ | ஈ. திருவள்ளுவர் |

*குறியீடுகள்:*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | அ | ஆ |
| B) | ஆ | அ | ஈ | இ |
| C) | அ | ஆ | ஈ | இ |
| D) | ஈ | அ | ஆ | இ |

We Shine Academy™

129. சேர்த்து எழுதுக: *அறிவு + அறிந்து*

A) அறிவுஅறிந்து
B) அறிவரிந்து
C) அறிவுவறிந்து
D) அறிவறிந்து

130. 'நேற்று வந்திலை' – எவ்வகை வாக்கியம் எனக் காண்க

A) நேர்கூற்று வாக்கியம்
B) அயற்கூற்று வாக்கியம்
C) எதிர்மறை வாக்கியம்
D) உடன்பாட்டு வாக்கியம்

131. பெயர்ச்சொல்லின் வகையறிக: '*தலை*'

A) பொருட்பெயர்
B) இடப்பெயர்
C) சினைப்பெயர்
D) காலப்பெயர்

132. பெயர்ச்சொல்லின் வகையறிக: '*தை*'

A) பொருட்பெயர்
B) இடப்பெயர்
C) சினைப்பெயர்
D) காலப்பெயர்

133. பெயர்ச்சொல்லின் வகையறிக: '*ஆடல்*'

A) தொழிற்பெயர்
B) காரணப்பெயர்
C) சினைப்பெயர்
D) இடப்பெயர்

134. பெயர்ச்சொல்லின் வகையறிக: '*பச்சை இலை*'

A) சினைப்பெயர்
B) இடப்பெயர்
C) பண்புப்பெயர்
D) காலப்பெயர்

135. பெயர்ச்சொல்லின் வகையறிக: '*நல்லன்*'

A) காரணப்பெயர்
B) தொழிற்பெயர்
C) சினைப்பெயர்
D) குணப்பெயர்

136. "*கா*" என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் கண்டறிக

A) காலம்
B) காதல்
C) காற்று
D) காப்பாற்று

137. "*தை*" என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் கண்டறிக

A) காகம்
B) காயல்
C) நிமிடம்
D) திங்கள்

138. "*மூ*" என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் கண்டறிக

A) வறுமை
B) காப்பு
C) மூப்பு
D) முயல்

139. "*தூ*" என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் கண்டறிக

A) வெண்மை
B) கருமை
C) வளமை
D) சேய்மை

140. "*வி*" என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் கண்டறிக

A) கண்
B) கேடு
C) அலங்காரம்
D) வலிமை

141. "*பாம்*" என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்

A) அணுகுண்டு
B) எறிகுண்டு
C) வெடிகுண்டு
D) எரிகுண்டு

WeShine Academy™

142. *'Grain Elevator'* எனும் ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்
A) பளு உயர்த்தி
B) தானிய தூக்கி
C) சுமை தூக்கி
D) மின் உயர்த்தி

143. *"புரோட்டோ கால்"* என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்
A) கருத்துரு
B) மரபுத்தகவு
C) விதிமுறைகள்
D) அணிக்கோவை

144. *"டெலிகேட்"* என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்
A) பேராளர்
B) உண்மையான
C) மேலாளர்
D) பண்பானவர்

145. *"விசா"* என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்
A) நுழைவுச்சீட்டு
B) கடவுச்சீட்டு
C) நுழைவுஇசைவு
D) ஒப்புச்சீட்டு

146. வழுஉச் சொல் அற்ற தொடரைத் தேர்க
A) சுவற்றில் எழுதாதீர்
B) சுவரில் எழுதாதீர்
C) செவுற்றில் எழுதாதீர்
D) சுவறில் எழுதாதீர்

147. மரபு வழு இல்லாத தொடரைத் தேர்க
A) ஓவியம் வரைந்தாள்
B) ஓவியம் எழுதினாள்
C) ஓவியம் பூசினாள்
D) ஓவியம் செய்தான்

148. மரபுப் பிழைகளை நீக்குக
A) முருங்கைச் சரடு
B) முருங்கைப் பிஞ்சு
C) முருங்கைக் கச்சல்
D) முருங்கைப் பாவை

149. தமிழ்ச் சொல்லைத் தேர்க
A) ரூபாய்
B) பேனா
C) கடுதாசி
D) சொத்து

150. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்க:
A) பனங்காட்டில் புலி உறுமிற்று
B) பனந்தோப்பில் புலி உறுமிற்று
C) பனங்காட்டில் புலி பிளிறிற்று
D) பனந்தோப்பில் புலி முழங்கிற்று

151. எதிர்ச்சொல் தருக: *வலம்*
A) வலது பக்கம்
B) இடம்
C) இடப்பக்கம்
D) வலப்பக்கம்

152. எதிர்ச்சொல் தருக: *பரவி*
A) வளர்ந்து
B) விரவி
C) சுருங்கி
D) தேய்ந்து

153. எதிர்ச்சொல் தருக: *கேண்மை*
A) நன்மை
B) தீமை
C) பகைமை
D) வண்மை

154. எதிர்ச்சொல் தருக: *அறம்*
A) மரம்
B) வீரம்
C) புறம்
D) மறம்

We Shine Academy™

155. எதிர்ச்சொல் தருக: *ஆழ*

A) மேலே
B) கீழே
C) மிதப்ப
D) குறைய

156. சந்திப்பிழை இல்லாத தொடரைத் தேர்க

A) துள்ளித் திரியும் பள்ளி பருவம் மாணவப் பருவம்
B) துள்ளி திரியும் பள்ளிப் பருவம் மாணவப் பருவம்
C) துள்ளித் திரியும் பள்ளிப் பருவம் மாணவப் பருவம்
D) துள்ளி திரியும் பள்ளிப் பருவம் மாணவ பருவம்

157. சந்திப்பிழை இல்லாத தொடரைத் தேர்க

A) கண்ணை காப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்
B) கண்ணை காப்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்
C) கண்ணைக் காப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்
D) கண்ணைக் காப்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்

158. சந்திப்பிழை இல்லாத தொடரைத் தேர்க

A) தட்டுத் தடுமாறி சென்ற முதியவருக்கு உதவினான்
B) தட்டு தடுமாறிச் சென்ற முதியவருக்கு உதவினான்
C) தட்டுத் தடுமாறிச் சென்ற முதியவருக்கு உதவினான்
D) தட்டுத் தடுமாறிச் சென்ற முதியவருக்குக் உதவினான்

159. "*தன்வினை*" வாக்கியத்தைக் கண்டறிக

A) மாணவன் திருத்தினான்
B) மாணவன் திருந்தவைத்தான்
C) மாணவன் திருப்பித்தான்
D) மாணவன் திருந்தினான்

160. வேர்ச்சொல்லை வினையாலணையும் பெயராக்குக: '*படி*'

A) படித்தல்
B) படித்தான்
C) படித்தவன்
D) படித்து

161. "*மொழியாமை*" என்பதன் இலக்கணக் குறிப்பு காண்க

A) எதிர்ச்சொல்
B) எதிர்மறை இடைநிலை
C) எதிர்மறை வினைத்தொகை
D) எதிர்மறை தொழிற்பெயர்

162. மோனையைக் காண்க: "*அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்.*"

A) அல்லவை - தேய அறம்
B) அல்லவை - அறம் பெருகும்
C) பெருகும் - நல்லவை
D) நல்லவை - இனிய சொலின்

163. மோனையமைந்த தொடரைத் தேர்க

A) இடுக்கல் உடையுழி ஊற்றுக் கோல்
B) எனைத்தானும் நல்லவை கேட்க
C) செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்
D) செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்

164. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக

A) இலக்குமி
B) செல்வம்
C) வறுமை
D) திரு

We Shine Academy™

165. மோனையினைக் காண்க
*“சாதியெனும் சாக்கடையில் புழுப்போல் சமயவெறிச் சழக்குகளில் தடுமாறி”*
A) சாதி – சமயம்
B) சழக்கு – புழு
C) தடுமாறி – வீழ்ந்து
D) சமயவெறி – நெளிந்து

166. கீழ்கண்ட தொடரில் அமைந்த எதுகையின் வகையைக் காண்க
*“அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்”*
A) இணை எதுகை
B) முற்றெதுகை
C) கீழ்க்கதுவாய் எதுகை
D) மேற்கதுவாய் எதுகை

167. *குனித்த புருவமும் கொவ்வைச்...*
*பனித்த சடையும் பவளம் போல்...*
இதில் பயின்று வரும் எதுகையின் வகையறிக.
A) சீர் எதுகை
B) அடி எதுகை
C) பொழிப்பு எதுகை
D) ஒரூஉ எதுகை

168. எதுகைத் தொடையை எடுத்தெழுதுக
*“அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்*
*எஞ்சாமை வேந்தர்க் கியல்பு”*
A) எஞ்சாமை - இயல்பு
B) அஞ்சாமை - ஈகை
C) அஞ்சாமை - எஞ்சாமை
D) எஞ்சாமை - இந்நான்கும்

169. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க
A) கொடை, கோடை, குடை, கூடை
B) கூடை, கொடை, கோடை, குடை
C) குடை, கூடை, கோடை, கொடை
D) குடை, கூடை, கொடை, கோடை

170. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க
A) அன்பு, ஈதல், உவகை, ஊக்கம்
B) உவகை, அன்பு, ஈதல், ஊக்கம்
C) அன்பு, உவகை, ஊக்கம், ஈதல்
D) ஈதல், அன்பு, உவகை, ஊக்கம்

171. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க
A) நிலம், நூல், நெல், நோன்பு, நாடு
B) நாடு, நிலம், நூல், நெல், நோன்பு
C) நாடு, நிலம், நூல், நோன்பு, நெல்
D) நெல், நோன்பு, நாடு, நிலம், நூல்

172. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க
A) சேதாம்பல், சோற்றுப்பானை, வீடுபேறு, வெற்றிடம்
B) சோற்றுப்பானை, வீடுபேறு, வெற்றிடம், சேதாம்பல்
C) சேதாம்பல், சோற்றுப்பானை, வெற்றிடம், வீடுபேறு
D) சோற்றுப்பானை, வெற்றிடம், வீடுபேறு, சேதாம்பல்

173. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
A) தீமொழி
B) புன்மனம்
C) கொடுவினை
D) கனிவாய்

We Shine Academy™

174. அகர வரிசைப்படி சொற்களை சீா் செய்க
A) காவலன், தச்சன், வைகறை, மீனவன்
B) காவலன், தச்சன், மீனவன், வைகறை
C) வைகறை, மீனவன், காவலன், தச்சன்
D) மீனவன், வைகறை, காவலன், தச்சன்

175. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக
A) சாய்ப்போம் கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு
B) கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்
C) போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் கெட்ட
D) வேரொடு சாய்ப்போம் கெட்ட போரிடும் உலகத்தை

176. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக
A) சுற்றுச்சூழலைக் காப்பது மனித கடமை தனி
B) தனி மனித கடமை காப்பது சுற்றுச்சூழலைக்
C) சுற்றுச்சூழலைக் காப்பது தனி மனித கடமை
D) காப்பது சுற்றுச்சூழலைக் தனி மனித கடமை

177. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக
A) முன்னே அணைகோல வேண்டும் வெள்ளம் வரும்
B) வெள்ளம் வரும் அணைகோல வேண்டும் முன்னே
C) அணைகோல வேண்டும் வெள்ளம் முன்னே வரும்
D) வெள்ளம் வரும் முன்னே அணைகோல வேண்டும்

178. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
A) ஆரண்ய காண்டம்
B) உத்தர காண்டம்
C) கிட்கிந்தா காண்டம்
D) அயோத்தியா காண்டம்

179. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
A) நெய்தல் திணை
B) முல்லைத் திணை
C) பாடாண் திணை
D) குறிஞ்சித் திணை

180. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
A) சேலம்
B) மும்பை
C) ஈரோடு
D) வைகை

181. *'தண்ணீர், தண்ணீர்'* நாடகத்தின் ஆசிரியர்
A) கோமல் சுவாமிநாதன்
B) வீராசாமி செட்டியார்
C) ஜெயகாந்தன்
D) சங்கரதாஸ் சுவாமிகள்

182. *'சீதையின் சபதம்'* எனும் புகழ்பெற்ற நூலின் ஆசிரியர்
A) கல்கி
B) கருவூர் கண்ணல்
C) மா. செங்குட்டுவன்
D) நா. பார்த்தசாரதி

183. ஒருமை பன்மை பிழையற்ற தொடரைத் தேர்க
A) புலிகள் ஓடியது
B) புலி ஓடின
C) புலிகள் ஓடாது
D) புலி ஓடியது

184. ஒருமை பன்மை பிழையற்ற தொடரைத் தேர்க
A) பறவை பறந்தன
B) பறவைகள் பறந்தது
C) பறவைகள் பறந்தன
D) பறவைகள் பறக்க

We Shine Academy™

185. பதினெட்டு உறுப்புகள் கலந்து வரப் பாடப்படும் நூல்
A) குறவஞ்சி
B) பரணி
C) அந்தாதி
D) கலம்பகம்

186. வேர்ச்சொல்லை தேர்வு செய்க: "*காமுறுவர்*"
A) காமு
B) கா
C) காமுறு
D) காம்

187. வேர்ச்சொல்லை தேர்வு செய்க: "*வீழ்ந்தான்*"
A) விழு
B) வீழ்ந்து
C) வீழ்ந்த
D) வீழ்

188. வேர்ச்சொல்லை தேர்வு செய்க: "*அறியேன்*"
A) அறி
B) அற்ற
C) அறிவு
D) அறு

189. வேர்ச்சொல்லை தேர்வு செய்க: "*நட்டான்*"
A) நாடு
B) நட
C) நட்டா
D) நடு

190. தொழிற் பெயரை தேர்வு செய்க: "*படி*"
A) படித்தான்
B) படித்தல்
C) படிப்பான்
D) படித்தனர்

191. விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க
'*குலசேகரர் திருமாலைப் புகழ்ந்து பாடினார்*'
A) குலசேகரர் திருமாலை எவ்வாறு பாடினார்?
B) குலசேகரர் திருமாலை புகழ்ந்து பாடினாரா?
C) குலசேகரர் யாரைப் புகழ்ந்து பாடினார்?
D) குலசேகரர் பாடிய பாடல் யாது?

192. விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க
'*உழைத்தவர் உண்ண முடியும்*'
A) எதை உண்ண முடியும்?
B) உழைத்தவர் உண்ண முடியுமா?
C) உழைத்தவர் எதை உண்பர்?
D) யார் உண்ண முடியும்?

193. எவ்வகை வாக்கியமெனக் கூறு - '*என்னே! தமிழின் வளமை*'
A) வினா வாக்கியம்
B) கலவை வாக்கியம்
C) செய்தி வாக்கியம்
D) உணர்ச்சி வாக்கியம்

194. விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க
"*ஆம், மனமாற்றம் என்னும் வரலாற்று நாடக நூலைத் தமிழ் குடிமகன் எழுதியுள்ளார்*"
A) மனமாற்றம் என்னும் வரலாற்று நாடக நூலை எழுதியவர் யார்?
B) மனமாற்றம் என்னும் வரலாற்று நாடக நூல் யாரால் எழுதப்பட்டது?
C) மனமாற்றம் என்பது எவ்வகை நூல்? அது யாரால் எழுதப்பட்டது?
D) மனமாற்றம் என்னும் வரலாற்று நாடக நூலைத் தமிழ் குடிமகன் எழுதியுள்ளாரா?

195. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்வு செய்க
*'மடைதிறந்த வெள்ளம் போல'*

A) தெளிவு
B) மதிப்பு
C) குறைவு
D) விரைவு

196. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்வு செய்க
*'தாமரை போன்ற'*

A) பல்
B) உடல்
C) முகம்
D) நடை

197. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்வு செய்க
*'மழை முகம் கண்ட பயிர் போல'*

A) மகிழ்ச்சி
B) பெருமிதம்
C) வருத்தம்
D) நிறைவு

198. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்வு செய்க
*'வேலியே பயிரை மேய்ந்தது போல'*

A) அழிவு
B) ஆக்கம்
C) பகைமை
D) துரோகம்

199. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்வு செய்க
*'கிணற்றுத் தவளை போல'*

A) தவித்தல்
B) பிடிவாதம்
C) அறிவின்மை
D) தொடர்பற்று இருத்தல்

200. வினையெச்சம் காண்க: *"காண்"*

A) கண்ட
B) கண்டு
C) காணல்
D) கண்டவன்

******

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

- *குறள் எண்:* 619

We Shine Academy™

## Keys for General Knowledge (GK) and General Tamil (GT)

### General Knowledge (GK)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 001 | A | 026 | C | 051 | C | 076 | A |
| 002 | D | 027 | B | 052 | A | 077 | B |
| 003 | D | 028 | D | 053 | D | 078 | D |
| 004 | A | 029 | A | 054 | D | 079 | A |
| 005 | B | 030 | A | 055 | D | 080 | A |
| 006 | B | 031 | B | 056 | A | 081 | A |
| 007 | A | 032 | A | 057 | D | 082 | C |
| 008 | A | 033 | D | 058 | A | 083 | D |
| 009 | B | 034 | B | 059 | C | 084 | A |
| 010 | C | 035 | A | 060 | C | 085 | C |
| 011 | A | 036 | C | 061 | C | 086 | B |
| 012 | A | 037 | A | 062 | D | 087 | C |
| 013 | A | 038 | B | 063 | A | 088 | B |
| 014 | C | 039 | A | 064 | C | 089 | D |
| 015 | A | 040 | A | 065 | A | 090 | B |
| 016 | C | 041 | C | 066 | A | 091 | A |
| 017 | A | 042 | A | 067 | B | 092 | C |
| 018 | C | 043 | A | 068 | D | 093 | B |
| 019 | A | 044 | D | 069 | D | 094 | B |
| 020 | B | 045 | B | 070 | B | 095 | A |
| 021 | D | 046 | C | 071 | D | 096 | C |
| 022 | B | 047 | B | 072 | C | 097 | A |
| 023 | A | 048 | D | 073 | A | 098 | A |
| 024 | B | 049 | B | 074 | C | 099 | D |
| 025 | A | 050 | D | 075 | B | 100 | C |

### General Tamil (GT)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 101 | A | 126 | A | 151 | B | 176 | C |
| 102 | D | 127 | C | 152 | C | 177 | D |
| 103 | D | 128 | C | 153 | C | 178 | B |
| 104 | C | 129 | D | 154 | D | 179 | C |
| 105 | A | 130 | C | 155 | C | 180 | D |
| 106 | A | 131 | C | 156 | C | 181 | A |
| 107 | D | 132 | D | 157 | D | 182 | B |
| 108 | C | 133 | A | 158 | C | 183 | D |
| 109 | A | 134 | C | 159 | D | 184 | C |
| 110 | A | 135 | D | 160 | C | 185 | D |
| 111 | B | 136 | D | 161 | D | 186 | C |
| 112 | A | 137 | D | 162 | B | 187 | D |
| 113 | C | 138 | C | 163 | C | 188 | A |
| 114 | C | 139 | A | 164 | C | 189 | D |
| 115 | D | 140 | A | 165 | A | 190 | B |
| 116 | A | 141 | C | 166 | D | 191 | C |
| 117 | B | 142 | B | 167 | B | 192 | D |
| 118 | D | 143 | B | 168 | C | 193 | D |
| 119 | A | 144 | C | 169 | D | 194 | D |
| 120 | B | 145 | C | 170 | A | 195 | D |
| 121 | C | 146 | B | 171 | B | 196 | C |
| 122 | C | 147 | A | 172 | A | 197 | A |
| 123 | C | 148 | A | 173 | D | 198 | D |
| 124 | C | 149 | D | 174 | B | 199 | C |
| 125 | D | 150 | A | 175 | B | 200 | B |

We Shine Academy™